செ.வெ.எண்.527/2021 நாள்.14.11.2021

# திருப்பத்தூர் ஸ்ரீ அமிர்தா மேல்நிலைப்பள்ளியில் திருப்பத்தூர் மாவட்ட சதுரங்க கழகத்தின் சார்பில் நடைபெற்ற முதலாவது மாவட்ட அளிவலான சதுரங்க போட்டியில் வெற்றிபெற்ற 50 மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா. இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

திருப்பத்தூர் ஸ்ரீ அமிர்தா மேல்நிலைப்பள்ளியில் திருப்பத்தூர் மாவட்ட சதுரங்க கழகத்தின் சார்பில் நடைபெற்ற முதலாவது மாவட்ட அளிவலான சதுரங்க போட்டியில் வெற்றிபெற்ற 50 மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா. இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

திருப்பத்தூர் ஸ்ரீ அமிர்தா மேல்நிலைப்பள்ளியில் திருப்பத்தூர் மாவட்ட சதுரங்க கழகத்தின் சார்பில் நடைபெற்ற முதலாவது மாவட்ட அளிவலான சதுரங்க போட்டியில் வெற்றிபெற்ற முதல் 10 இடங்களை பிடித்த 50 மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள், பதக்கங்கள் மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கியதில் மகிழ்ச்சியடைகிறேன். இன்று நடைபெற்ற முதலாவது மாவட்ட அளிவலான சதுரங்க போட்டியில் அரசு, தனியார் பள்ளிகளில் படிக்கின்ற 8 வயதிற்குட்பட்ட 30 மாணவர்கள், 11 வயதிற்குட்பட்ட 53 மாணவர்கள், 14 வயதிற்குட்பட்ட 57 மாணவர்கள், 17 வயதிற்குட்பட்ட 43 மாணவர்கள், பொது பிரிவை சார்ந்த 22 மாணவர்கள் என மொத்தம் 5 பிரிவுகளில் 205 பள்ளி, கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற அனைவருக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துகொள்கிறேன்.

நமது உடலில் முளை, இதயம், முழு உடல் என 3 உறுப்புகள் உள்ளன. இவைகள் அனைத்தையும் ஒரே நேரத்தில் செயல்படவைப்பது தான் விளையாட்டு போட்டி ஆகும். நமது மாவட்டத்தில் மாதம்தோறும் அரசு பள்ளிகள், தனியார் பள்ளிகளில் இது போன்ற அனைத்து வகையான விளையாட்டு போட்டிகளையும் நடத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். முதலாவதாக பள்ளிகளின் அளவிலான போட்டிகள் நடத்தவும், இரண்டாவதாக வட்டார அளிவலான விளையாட்டு போட்டிகள் நடத்தவும், 6 வட்டார அளவிலான விளையாட்டு போட்டிகள் நடத்தவும், அதன் பிறகு மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் நடத்தவும் திட்டம் தயார்செய்ய வேண்டும் என திருப்பத்தூர் மாவட்ட சதுரங்க கழகத்தை கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலும் சதுரங்க போட்டியில் அரசு, தனியார் பள்ளிகளில் மற்றும் கல்லூரிகளிலும் படிக்கின்ற மாணவர்கள் அனைவரும் இது போன்ற சதுரங்க போட்டிகளில் மாணவர்கள் பங்கேற்று தனது புத்தி கூற்மைகளை மேம்படுத்திக்கொள்ள வேண்டும். இது போன்ற போட்டிகளின் மூலம் நமது மாவட்டத்திலிருந்து அடுத்த 10 அல்லது 20 வருட்த்திற்குள் 10 விஸ்வநாதன் ஆனந்த் உருவாகவார்கள் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாநில சதுரங்க கழகம் துணை தலைவர் திரு.எஸ்.மணிகன்டசாமி, வேலூர் மாவட்ட சதுரங்க கழகம் செயலாளர் திரு.பி.மனோகரன், திருப்பத்தூர் மாவட்ட சதுரங்க கழகம் தலைவர் திரு.ஜி.சி.ஸ்ரீதரன், செயலாளா திரு.பி.சந்திரசேகரன், பொருளாளர் திரு.டி.ஆனந்த், பள்ளி செயலாளர் திரு.மாதவ. பாரதி, மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**